# நித்திகைக்குளத்தில் ராணுவம் பின்வாங்கியது

19-9-1991

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 | திருவள்ளுவர் ஆண்டு 2022 | புரட்டாதி 3 | இதழ்: 220
யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 19-9-1991

(முல்லைத்தீவு)
மணலாறு, நித்திகைக்குளம் பகுதிகளில் இராணுவத்திற்கும், விடுதலை புலிகளுக்கும் இடையில் நடைபெறும் கடும் யுத்தத்தை அடுத்து நித்திகைக்குளம் பகுதியிலிருந்து இராணுவம் தற்போது பின்வாங்குவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

[4ம் பக்கம் பார்க்க]

## 20வது நாளாக கடும் யுத்தம்

(யாழ்ப்பாணம்)
முல்லை, மணலாறு, நித்திகைக்குளக் காட்டுப் பகுதியில் தொடர்ந்து 20வது நாட்களாக மூர்க்கத்தனமான விமானக் குண்டு வீச்சுக்கு மத்தியில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் உக்கிரமான சண்டை நடைபெற்று வருகிறது.

4ம் பக்கம் பார்க்க]

## 4 படையினர் பலி

(முல்லைத்தீவு)
மணலாறு மாவட்டத்தில் நடைபெற்றுவரும் மோதலில் நேற்றுமுன்தினம் 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும்' 15 படையினர் படுகாயமடைந்ததாகவும் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் நேற்று கொழும்பில் தகவல் வெளியிட்டுள்ளார்.

(4ம்பக்கம் பார்க்க]

# ★ இனப் பிரச்னை தீர்வுக்கு
# புதியதொரு சமாதானத் திட்டம்
# தொண்டா - பிரபாவுக்கு கடிதம்

## 'இந்து' பத்திரிகை தகவல்

(சென்னை)
**இலங்கை அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையில் சமாதான பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகளை தெளிவுபடுத்தியும் அரசின் நிலைப்பாடு பற்றிய விளக்கத்தையும், விடுதலைப்புலிகள் தலைவர் வே. பிரபாகரனுக்கு அமைச்சர் தொண்டமான் கடிதம் மூலம் அனுப்பிவைத்துள்ளார்.**

தமது புதிய முயற்சி குறித்து அமைச்சர் தொண்டமான் திருச்சியில் வைத்து 'இந்து' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்;

இந்தியா வரும்போது மேற்படி கடிதத்தை தாம் திரு. பிரபாகரனுக்கு அனுப்பிவைத்ததாகவும் இதற்கான பதிலை பிரபாகரன் எனக்கு அனுப்பிவைத்திருப்பார் எனத் தாம் நம்புவதாகவும் அவர்கூறினார்.

கடிதத்தில் என்ன விடயங்கள் எழுதப்பட்டிருந்தன என்பதைப் பற்றி எதையும் இப்போதைக்கு கூறமுடியாதென்றும் இக்கடிதம் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் மூலம் அனுப்பப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

இப்பேட்டி 'இந்து'ப் பத்திரிகையில் முன்பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. (எஸ்-க)

## பாராளுமன்றம் கலைக்கப்படமாட்டாது

(கொழும்பு)
நாட்டின் தற்போதைய அவசரகால பிரமாணங்களை மாதாந்தம் நீடிக்கும் பிரேரணைக்கு பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கவேண்டியிருப்பதால் இத்தகைய சூழலில் பாராளுமன்றத்தை கலைப்பது சாத்தியமில்லையென ஜனாதிபதி கூறியுள்ளார்.

(2-ம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் நிலையங்கள் மீது புலிகள் தாக்குதல்

(அம்பாறை)
அம்பாறை மாவட்டத்தில் உள்ள இரண்டு பொலிஸ் நிலையங்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்களை மேற்கொண்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அம்பாறையைச் சேர்ந்த சம்பிட்ட, வெல்லாவெளிப் பகுதிகளிலுள்ள பொலிஸ்நிலையங்கள் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்

(4ம் பக்கம் பார்க்க)

## 200 கோடி ரூபா நிதியுதவி இலங்கைக்கு இடைநிறுத்தம்

[கொழும்பு]
"சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்க விருந்த 200 கோடி ரூபா நிதி உதவியை அவசரமாக இடைநிறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

இலங்கையில் எழுந்துள்ள அரசியல் நெருக்கடியை அடுத்தே மேற்படி நிதியம் இவ் உதவியை உடனடியாக இடைநிறுத்தியுள்ளது

நாட்டில் மீண்டும் அரசியல் நிலைமை சீரடைந்த பின்பே தமது உதவி நடவடிக்கை தொடருமென்றும் தற்போது இந்த நிலையை தாங்கள் உன்னிப்பாக அவதானிப்பதாகவும் மேற்படி நிதியம் தெரிவித்துள்ளது [சி]

## சுதந்திரக் கட்சியிலும் பெரும் இழுபறி

(கொழும்பு]
ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள்ளும் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதான செயலாளர் திரு. ஜே ஆர் பீ. சூரியபெருமா வெகுவிரைவில் பிரதான செயலாளர் பதவியிலிருந்து நீக்கப்படவிருக்கிறார்.

இதேவேளை கட்சியின் தலைமைப் பதவியிலும் மற்றும் செயற்குழு அமைப்பிலும் இழுபறிநிலை ஏற்பட்டுள்ளது. (153)

## பாதுகாப்பு வழங்கக் கோரி சபாநாயகருடன் சந்திப்பு

(கொழும்பு]
பாராளுமன்றம் மீண்டும் 24ம் திகதி கூடும் போது தமக்கு பூரண பாதுகாப்பு வழங்குமாறு எதிர்க்கட்சிகளும் ஐ. தே. க. அதிருப்தியாளர்களும் கோரியுள்ளனர்.

இது தொடர்பாக இவர்கள் சபாநாயகரை நேரில் சந்தித்து தமது அச்சத்தை அவரிடம் விரிவாக எடுத்துக்

(4ம் பக்கம் பார்க்க]

## உலக வங்கியின் கூட்டம் ஒத்திவைப்பு

(நியூயோர்க்)
இலங்கைக்கான இந்த வருட உலக வங்கியின் கூட்டம் அடுத்த வருடம் பெப்ரவரி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது

(4-ம் பக்கம் பார்க்க)

## படைகள் மத்தியில் பிளவு ஏற்படலாம்?

(கொழும்பு)
நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலையில் படையினர் மத்தியில் பிளவு ஏற்படக்கூடிய சாத்தியக்கூறு ஏற்பட்டிருப்பதாக அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதிக்கு எதிரான சதி முயற்சியில் இராணுவத் தரப்பினர் சிலர் ஈடுபட்டிருப்பதாகவும், தற்போது ஜனாதி

(4-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை நிலைமை இந்தியா அவதானிக்கிறது

(கொழும்பு)
இலங்கையில் அரசியல் உறுதிப்பாடு தொடரவேண்டுமென்பதே இந்தியத் தலைவர்களின் விருப்பமாகுமென இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய அமைச்சர் தொண்டமான் நேற்று தெரிவித்தார்.

4-ம் பக்கம் பார்க்க)

## புதிய தேர்தல் வேண்டாம் ஆணையாளருக்கு மனு

(கொழும்பு)
பாராளுமன்றம் கலைக்கப்பட்டாலும் புதிய தேர்தலை நடாத்த வேண்டாமெனக் கோரும் மனு ஒன்றை தேர்தல்

(4-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### வகுப்பு

உரும்பிராய் O/L மாணவர்கட்கு தினமும் பி. ப. 5-15 மணிக்கு உரும்பிராய் கதிர் கல்வி நிறுவனத்தில் விசேட கணித வகுப்பு நடைபெறுகின்றன. ஆசிரியர்: எஸ். கே. ஜீவமோகன். (சி 5370)

### தமிழ் நூல்கள் தேவை

தரமானபழைய, புதியதமிழ் நூல்கள் (நாவல்கள்) தேவைப்படுகின்றன. நியாயமான விலையில் கொள்வனவு செய்யப்படும். தொடர்பு: அறவழி பொது நூலகம், அறவழிப் போராட்டக்குழு சாவகச்சேரி. (சி 1589)

### கணித வகுப்பு

O/L மாணவர்க்கான விசேட கணித வகுப்புக்கள் தினமும் காலை 6-00 மணிக்கு நடைபெறுகின்றன. இடம் பெயர்ந்த மாணவர்களுக்கும், மாவீரர் குடும்பங்களுக்கும் இலவசம். முகவரி: ஆசிரியர் எம். கே. ஜீவமோகன், தமிழவைத் தலைவர், தமிழ் மாமன்றம். செல்வச்செந்தில் வீதி, இருபாலை. கோப்பாய். [சி-5731]

### அரசாங்க எழுதுனர் சேவை

புதிய பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்; 24-09-91 2-30 மணி- வகுப்புகள் செவ்வாய், புதன் கிழமைகளில் 2-30—5-00 வரை நடைபெறும். Sqoken English வகுப்புகளும் நடைபெறுகின்றன. School of Business Administration, 16, 3rd Cross Street, Jaffna. [சி-5367]

### எழுதுவினைஞர் தேவை

கல்வியங்காடு நட்சத்திர கல்வி நிறுவனத்திற்கு எழுதுவினைஞர் தேவை (தமிழ் தட்டச்சு தெரிந்தவர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும்) தபால் மூலம் தொடர்புகொள்ளவும். பொதுச்செயலாளர், தமிழ் மாமன்றம், செல்வச் செந்தில் வீதி, இருபாலை, கோப்பாய். [சி-5369]

### பயிற்சிகள்

ரெவிவிஷன்,வீடியோடெக், றிப்பெயறிங்,றிவைண்டிங்,எலக்றிக்கல் வயறிங், ஏயர்கொண்டிசனிங், Quantity Surveying பயிற்சிகள் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்றுவிக்கப்படுகின்றன. ஆரம்பம் 21-09-91. Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவையருகாமை). யாழ்ப்பாணம். (ஏ-1579)

### முக்கிய அறிவித்தல்

நீண்ட இடைவெளிக்குப்பின் அசல் ஆர். வி. ஜி. பீடிகள் விற்பனைக்கு வந்துள்ளது. அசல் ஆர். வி. ஜி. பீடிகள் கூடுதல் பச்சை நீலம் கலந்த வர்ண பண்டல் கட்டு லேபல்களில் வெளிவருகின்றன. அசல் ஆர். வி. ஜி. பீடிகளில் 12பீடிகள்கொண்ட கட்டுக்கள் வெள்ளை லேபல்களில் வெளிவருவதில்லை. போலி பீடிகளை வேண்டி ஏமாறாமல் அசல் ஆர். வி. ஜி. பீடிகளை கேட்டு வாங்குங்கள். ஆர். வி. ஜி. நிர்வாகம், 58, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (சி-5860)

**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**

## கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு 290 லட்சம் ரூபா சேதம்


(மட்டக்களப்பு)

வந்தாறு மூலையில் அமைந்துள்ள கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்திற்கு கடந்த வருடம் ஜூன் மாதம் ஏற்பட்ட ராணுவ நடவடிக்கையினால் 290 லட்சம் ரூபா சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பல்கலைக்கழகத்தை புனரமைப்பதற்கு பணத்தைச் செலவிட உயர்கல்வி அமைச்சு தயாராக இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிபெறும் மாணவர்களும் தற்போதைய சூழ்நிலை காரணமாகவும், அங்கு போதிய வசதியின்மையாலும் வேறு பல்கலைக்கழகங்களுக்கு மாற்றம் பெற்றுவிடுவதாகவும் கூறப்படுகிறது. [153]

## 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**அமரர் பரமலிங்கம் மயில்வாகனம்**

மலர்வு: 18-09-1926

உதிர்வு: 20-08-1991

அன்னாரின் மரணச்சடங்கில் பங்குபற்றியோருக்கும் அனுதாபம் தெரிவித்தோருக்கும், உதவி புரிந்தோருக்கும் நன்றி தெரிவிப்பதோடு 19-09-1991 வியாழக்கிழமை நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரிகையிலும் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

புங்குடுதிவு-5. [சி-5347]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**அமரர் ஆறுமுகம் ஞானப்பிரகாசம்**

(பிரதம கணக்காளர்)

மலர்வு உடுப்பிட்டி: 25-03-1910

உதிர்வு சங்கானை: 21-08-1991

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எம்மை அன்போடும் பண்போடும் பாசத்தோடும் வளர்த்து நல்வழிகாட்டி வாழவைத்து இமைப்பொழுதில் இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத்தெய்வமே! தாங்கள் எங்களைவிட்டுப் பிரிந்து ஒருமாத காலமானாலும் உங்கள் பசுமையான நினைவுகள் எமது நெஞ்சங்களில் என்றென்றும் நிலைத்திருக்கும்.

21-09 1991 வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கும் அன்னாரது வீட்டுக்கிருத்திய அழைப்பில் பங்குகொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கும்,
அன்பு, மனைவி, மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

மு. இரத்தினம் (மைத்துனர்)
பிரதான வீதி, சங்கானை. (சி-5374)

## உதை பந்தாட்டப் போட்டி

1987ம் ஆண்டு நடந்த அசம்பாவிதங்களால் இறந்த கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த 53 பொதுமக்களின் ஞாபகார்த்தமாக நடாத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டி.

இதில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அணிகள்யாவையும் கேட்டுக்கொள்கிறோம்.

**எதிர்வரும் 27-09-1991க்கு**

முன்னர் உங்களின் விண்ணப்பங்களை விண்ணப்பிக்கவும்

விண்ணப்பிக்கும் முகவரி:

மதன் கடை (டிப்போக்கு முன்பாக)
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.
Jaffna Technical Institute
(றெயில்வே கடவைக்கு அருகாமை)
ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.
(சி 5373)

## JAFFNA COLLEGE

VADDUKODDAI.

AEB A/L (English Medium) First Year classes and SEG, GCSE (English Medium O/L) 1992 classes will commence on Tuesday 24th September 1991. Students please apply on forms available at the College Office.

PRINCIPAL.

(A-1588)

யாழ்ப்பாணம் சைவசித்தாந்த
உயர் நிறுவன நிதி உதவிக்காக

**13-10-91**

யாழ். இந்து குமாரசாமி மண்டபத்தில்
இலங்கை வேந்தனின்
கதகளி பரத நாட்டியம்
புலவர் முத்து இராசரெத்தினத்தின்
எல்லாளன், சங்கிலியன், பண்டாரவன்னியன், கண்டி அரசன் முதலிய வரலாற்று நாடக வரிசையில்

## "இலங்கை வேந்தன்"

(இசை, நடன, நாடகம்)



இராவணனாக இலங்கை வேந்தன் தோன்றும் காட்சி)

சைவப்புலவர்
மு. திருஞானசம்பந்தபிள்ளை
கௌரவ அதிபர்

சித்தாந்த கலாநிதி
க. கணபதிப்பிள்ளை
கௌரவ அமைப்பாளர்

அன்பளிப்பு: மகிழ்னி மரக்காலை
அரசடி வீதி. [சி 5375] சந்நிதிமடம்

# பலம் வாய்ந்த இந்தியப் படைகளால்
# முடியாததை இலங்கை படைகளால் முடியுமா?

[நேற்றைய தொடர்ச்சி]

விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் [வயது 36] குறைந்த தோற்றத்தையேகாட்டுகிருர். புலிகளிடையே நடந்த அதிகாரப் போட்டியொன்றில் அவர் கொல்லப்பட்டுவிட்டதாக வதந்திகள் அடிபட்டபோதிலும், அவர் உயிருடனிருப்பது மட்டுமல்லாமல் ஆனையிறவுப் போரை திரு. பிரபாகரனே முன்னின்று நடாத்தியதாக

## 'ஏசியா வீக்' கட்டுரையாளர் விமர்சனம்

அரசு தரப்பினர் நம்புகின்றனர்.

யுத்தத்தினால் அழிக்கப்பட்ட வடபகுதியின் கரையோரமாகவுள்ள வல்வெட்டித்துறைப் பட்டணத்தில் பிரபாகரன் பிறந்தார். இவர் இரு பிள்ளைகளின் தந்தையாவார். 16 வயதில் ஒரு கரந்தடிப்படையாளியாகி போராட்டத்தை ஆரம்பித்தார்.

1987-ல் இந்தியப்படையுடனை யுத்தத்தின்போது புலிப் படையினரின் உற்சாகத்துக்காக அமெரிக்க ஹொலிவூட்டின் நடிகரான கிளின்ற் ஈஸ்வூட்டின் வீடியோ நாடாக்களை [போர் திறன் மிக்க] பயன்படுத்தினர்கள்.

ராஜீவ்காந்தியின் கொலையில் புலிகள் சம்பந்தப்பட்டதாக இந்திய அரசு புலிகளைக் குற்றம்சாட்டுகிறது. இதன்ஒரு கட்டமாகவே பிரிட்டனில் புகலிடம் கேட்டிருந்த புலிகளின் வெளிநாட்டு பொறுப்பாளர் கிட்டுவை அங்கிருந்து வெளியேற்றும் நடவடிக்கையின் பின்னணியில் இந்தியா இருந்தது.

### கடற்படை கண்காணிப்பு

இதற்கிடையில் பாக்கு நீரிணையில் இந்திய கடற்படையினர் தமது பலத்தை அதிகப்படுத்தியுள்ளனர். இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் கடற்பகுதியை பலமாக கண்காணிக்குமாறு இந்திய அரசு கடற்படைக்கு கடும் உத்தரவை வழங்கியுள்ளது.

இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி புலிகள் ஆயுதங்களையும் தமது ஆட்களையும் கொண்டு செல்வதை தடுத்து நிறுத்துமாறும் இந்திய பாதுகாப்பு அமைச்சர் சரத் பவார் கடும் உத்தரவு வழங்கியுள்ளார்.

[கடந்த ஆகஸ்ட் மாதம் வெளிவந்த 'ஏசியா வீக்கில்' அதன் தெற்காசிய நிருபர் திரு. ஜோன் கோல்மி எழுதிய 'இரு தேசங்களின் கதை' என்ற தலைப்பிலான கட்டுரை இங்கு தொடர்ச்சியாக தரப்படுகிறது.]

தமிழகத்தில் 2000 கமாண்டோப் படைகளை நிறுத்தி அங்கு புலிகளின் நடவடிக்கைகளை தடைசெய்ய இந்திய அரசு முயல்கிறது. இந்திய உள்நாட்டு அரசியலில் புலிகள் ஈடுபட்டுள்ளதாக இந்தியா சந்தேகப்படுவதாக கொழும்பு பல்கலைக்கழக அரசியல் பேராசிரியர் ஜெயதேவ உடான்கொட தெரிவித்தார். புலிகளை பலவீனப்படுத்தினால் சில அரசியல் தீர்வுகளை செய்யமுடியுமென இந்திய அரசு எதிர்பார்க்கிறது.

### தாக்குதல் தொடரும்

இதே நேரத்தில் ஸ்ரீலங்கா முருகள் இன்னுமொரு யுத்தத்தை நாசப்படுத்துகிறது' ஆனையிறவுப் படைகள் புலிகளின் வாசற்படியில் நிற்கிருர்கள். கடைசிப்புலியை அழிக்கும் வரை படைகளின் தாக்குதல் தொடருமென ஆனையிறவுப் போரின்பின் ஜெனரல் சிறில் ரணதுங்க கூறினர்.

இதேவேளை இலங்கை அரசு தனது விமானப்படையின் பலத்தை வடபகுதியில் இருமடங்காக்குவதற்காக சீனவிடமிருந்து ஆறு 'எவ் – 85' ரக யுத்த விமானங்களை வாங்கியுள்ளது. இதனை தற்போது போரிலும் பயன்படுத்துகிறது.

விடுதலைப் புலிகளை அடக்க உதவுமாறு வடபகுதிக்கான படைத் தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ தமிழ் மக்களைக் கேட்டுள்ளார்.

### யுத்தத்தின் மூலமல்ல

இருந்தும், [பேச்சுவார்த்தை மூலம்தான் பிரச்சினைக்குத் தீர்வு காணலாமென ஜனதிபதி பிரேமதாஸா கூறுகிருர் 'ஒரு யுத்தத்தில் ஒருவரும வெற்றி கொள்வதில்லை. ஒவ்வொருவரும் தோற்பார்களென ஆனையிறவுப்போரின்பின் ஜனதிபதி கூறினர். பேச்சுவார்த்தை மூலம்தான் மனித பிரச்சினைகளை தீர்க்கலாம். நேருக்குநேரான யுத்தத்தின் மூலமல்ல என்றும் அவர் கூறுகிருர்.

பலம் வாய்ந்த 52,000 இந்தியப் படையினர் 1990 ல் வெளியேறும்வரை கட்டுப்பாட்டில் வைக்க முடியாததை 45,000 இலங்கைப் படைகளால் எல்லையைப் பாதுகாக்கமுடியுமா என்பது சந்தேகமே என்கிருர்கள் அவதானிகள்.

### புலிகளின் அனுதாபிகள்

யாழ்ப்பாணத்திலுள்ள பல லட்சம் மக்கள் புலிகளின் அனுதாபிகளாயிருக்கிருர்கள், யாழ். குடா நாட்டின் மீது இராணுவ நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டால் மக்கள் நெருக்கமாகவுள்ள குடா நாட்டில் பெரும் ரத்தக்களரி ஏற்படுமென ஒரு நிபுணர் எச்சரிக்கை செய்துள்ளார்

இந்த நடவடிககை மிகப் பெரும் செலவையும் ஏற்படுத்தும். கொழும்பு நிறைசேரி இந்த யுத்தத்திற்காக ஒரு நாளைக்கு 5,75,000 டாலரை செலவிடுகிறது. வடக்கு-கிழக்கை மீண்டும் கட்டியெழுப்ப தினமும் ஒரு கோடி டாலராக செலவு அதிகரித்துச் செல்கிறது

மனித அழிவும் தினமும் கூடுகிறது ஆயிரக்கணக்கான மக்கள் இறந்து விட்டார்கள் கடந்த பத்துவருடத்தில் வடக்கு-கிழக்கிலிருந்து மூன்றில் ஒரு பகுதி தமிழர் நாட்டை விட்டு வெளியேறிவிட்டனர். மேலும் 20 வீதமானவர்கள் மேற்கு நாடுகளுக்கு சென்று குடியேறி விட்டார்கள். [தொடரும்]

## சமூக மேம்பாட்டு கருத்தரங்கும் செயலமர்வும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள யாழ். கல்விக்கோட்ட முறைசாரக் கல்வி உபவள நிலயத்தினுல் சமூகமேம்பாட்டுக்கான கருத்தரங்கையும், செயலமர்வையும் எமது பிரதேசத்திற்கு பொருத்தமான கல்வி பற்றியும் இம்மாதம் 22ம், 23ம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 2-00 மணிவரையும் நடைபெற இருக்கின்றது.

இதில் அதிபர்கள், ஆசிரியர்கள், சனசமூகநிலையப் பிரதிநிதிகள் யாவரும் பங்குபற்றலாம் என வளநிலையப்பொறுப்பாளர் இ. பாலகுமார் தெரிவித்துள்ளார்.

## 45-ம் நாள் நினைவலைகள்



வீரவேங்கை தும்பன் [சூரி]

[சின்னத்தம்பி சூரியமூர்த்தி]

| ஈழத்தாய் மடியில்: | ஈழமண் பிடியில்: |
|---|---|
| 02-02-1972 | 06-08-1991 |

திதி: 19-9-1991

எங்கே தும்பன்?
என்று நாங்கள் - உன்
தோழர்களை கேட்ட போது
அன்றே நீ பல காவியம்
படைத்து விட்டு ஆனையிறவு முகாம்
தகர்ப்பில் நீ பங்கு கொண்டாய்
தும்பனே நித்தம் உன் வரவை
நாங்கள் நினைத்தபோது - அது
உன் மரணசெய்தியை - கொண்டு
வந்தார்கள் உன் தோழர்கள்
எங்கள் விழிகளில் இருந்து
கண்ணீர்தான் பரிசாக கிடைத்தது.
நாங்கள் உன்னேடு பழகிய
பசுமையான பேச்சுக்கள் - எம்
நெஞ்சை விட்டு அகலாது
ஓ தும்பனே.........
நீ மடியவில்லைடா
உன் கதை முடியவில்லைடா.

உன் பிரிவால் வாடும்:
ஐயா, அம்மா,
சகோதர - சகோதரிகள்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்,

மட்டுவில் தெற்கு,
சிவன்கோவில் றேட்,
சாவகச்சேரி.
(சி-5372)

## இராசி பலன்

19 - 09 - 1991
வியாழக்கிழமை
தமிழுக்கு புரட்டாதி 3

ஏகாதசி ந: இ. 12-41வரை; உத்தராடம் பி.ப. 3-58வரை, சித்தயோகம். இராகுகாலம் பகல் 1-33 முதல் 3-03வரை, சுபநேரம் காலை 7-33 முதல் 9-03 வரை.

மேடம்: அதிர்ஷ்டவாய்ப்பு, தொழில் சிறப்பு, உல்லாசபணம்.

இடபம்: தவருன செயல், வாக்குவன்மை, காரியவிக்கினம்

மிதுனம்: தொழில்தகராறு அயோக்கியதனம், வீண்பயம்.

கடகம்: வீட்டில் சுபகாரியம், பொருள்வரவு, குடும்ப மகிழ்ச்சி.

சிங்கம்: நல்லோர் சிநேகம் இனசன மகிழ்ச்சி, கடும் உழைப்பு.

கன்னி: துரோகமிழைத்தல், அதிகயோசனை, குடும்பகஷ்டம்

துலாம்; ஏமாற்றம், தந்தை பற்றிய கவலை, தொழில் கஷ்டம்

விருச்சிகம்: வெளியூர்செய்தி புத்திரர் உதவி மனமகிழ்ச்சி.

தனுசு: முற்றுப்பெருத பிரச்சனை, சகோதர துன்பம், மனச்சுமை.

மகரம்: வெற்றிக் களிப்பு, தொழில்முதலீடு, இனசன வருகை.

கும்பம்: நெஞ்சுவலி, மனப் போராட்டம், கடன் சுமை

மீனம்: விந்தைவிருத்தி, பெண் உதவி, காரியசித்தி, தானதர்மம்.

ஜோஸ்யர்

## 21ந் திகதி பரீட்சை.

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட இறுதியாண்டுப் பரீட்சை அடுத்தமாதம் 21ம் திகதி நடைபெறவுள்ளதாக பல்கலைக்கழகப்பதிவாளர் தெரிவித்துள்ளார்.

## பாராளுமன்றம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மக்களைபாதுகாக்கவும், நாட்டில் அமைதிநிலவவும் பாராளுமன்றம் கலைக்கப்படமாட்டாது. என்றும் கூறினர்.

வடக்கு-கிழக்கில் அமைதியை ஏற்படுத்துவதே இன்று அவசியமாக உள்ளது தீவிரவாத நடவடிக்கையையும், தொடர்ந்தும் நிலவும் நிட்சயமற்றநிலைமையை நீக்கவும் சமாதானம், பாதுகாப்பை பேணவும், அபிவிருத்தியைதுரிதமாக மேற்கொள்ளவும் மக்களின் அவலங்களை தீர்ப்பதும் தற்போது முக்கிய கடமையாகும் என்றும் அவர் கூறினர். (சி)

## தியாகத் தீ-5

ஐந்தாம்நாள் மக்கள்
சிந்திய கண்ணீர்
வெந்தியை மூட்ட
வீறுடன் பாய்ந்தது...
இந்திய அரசின்
ஏளனம் தொடர்ந்தது!

- வாஞ்சிநாதன்.

## பதில் தலைவர்

(கொழும்பு)

நீதியரசர் கே பாலகிட்ணர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பதில் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ஜனதிபதி ஆர். பிரேமதாசா முன்னிலையில் இவர் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசராக இவர்கடமையாற்றியது குறிப்பிடத்தக்கது.

## பெருமாளே! என்தன் துணை நீயே!!

ராகம்: ஆனந்தபைரவி தாளம்: ஆதி

பல்லவி

திருமாலே என்றும் அருள்வாயே — வண்ணைப்
பெருமாளே என்தன் துணைநீயே — கண்ணு!
...... (திரு......)

அனுபல்லவி

அரியவனே அன்பர்க் குரியவனே — அன்று
கரியானை துன்பம் துடைத்தவனே — மன்னு
...... (திரு......)

சரணம்

திசைமறந்து இன்று உழலுகின்றேன் - செல்லும்
விசையிழந்து நின்று தழம்புகின்றேன் - நல்ல
இசைமறந்து நொந்து புலம்புகின்றேன் - வண்ணைத்
திசைநடந்து வந்துன் சரண்புகுந்தேன் - ஐயா!
...... (திரு......)

— முருகு

★ (இன்று வண்ணை பெருமாள் கோவில் ரதோற்சவம்)

★ 'வெஸ்ற்மினிஸ்ரர்' முறையிலான

# பாராளுமன்ற அமைப்பே நாட்டு பிரச்னைக்கு காரணம்

## தொண்டமான் கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கையின் பிரச்னைகளுக்கு காரணம் 'வெஸ்ற்மினிஸ்ரர்' அமைப்பேயாகும் என கிராமியக் கைத்தொழில் அமைச்சர் தொண்டமான் கூறியுள்ளார்.

'வெஸ்ற்மினிஸ்ரர்' பாணியிலான பாராளுமன்ற அமைப்பு முறை நிலவிய காலத்திலேயே இலங்கையில் சகல பிரச்னைகளும் ஏற்பட்டன.

தற்போதைய ஜனாதிபதி ஆட்சி முறையே சில முக்கிய பிரச்னைகளுக்குப் பரிகாரம் கண்டது. நாட்டுக்குத் தற்போதைய அமைப்பு முறையே சிறந்தது என்றும் திரு. தொண்டமான் குறிப்பிட்டார்.

# 6 பிரிட்டிஷ் எம். பி.க்கள் பேச்சு நடாத்த கோரிக்கை

(லண்டன்)

இலங்கைப் பிரச்னைக்கு உடனடித் தீர்வைக்காண நிபந்தனையற்ற முறையில் புலிகளும் அரசும் நேரடிப் பேச்சுக்களை நடாத்த வேண்டுமென 'பிரிட்டனின்' மக்கள் சபையில்' 6 எம்.பிக்கள் கோரியுள்ளனர்.

இக் கோரிக்கையை 'மக்கள் சபையில்' எம் பிக்களான கலாநிதி டெவ்டி எலிஸ் தோமஸ், கலாநிதி நோர்மன் ஏ. குட்மான், திரு. தோமஸ் கிரஹாம், திரு கீர்த் பிராட்லி திரு. அலன் மீல், திரு. ஹரி பார்னஸ் விடுத்துள்ளனர்.

சிங்கள-தமிழ் அரசியல் பிரச்னையை தீர்க்கவும் அப்பாவி மக்கள் கொலைப்படுவதை நிறுத்தவும் இப் பேச்சுக்கள் அவசியமென்றும் அவர்கள் கூறியுள்ளனர். (சி)

## பொது அறிவுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தாய் மன்றம் தனது ஓராண்டு சேவையை பூர்த்தி செய்ததையொட்டி விபுலானந்தர் ஞாபகார்த்த பொது அறிவுப்போட்டி [இல: 1]யை 15 பாடசாலைகளில் இன்று மாலை 4-00 மணிக்கு நடாத்தவுள்ளது. இத்தேர்வில்மொத்தம்725க்கு மேற்பட்ட மாணவர்கள் தோற்றுகின்றனர்.

## தியாகி திலீபனின் கூட்டங்கள்

[யாழ்ப்பாணம்]

தியாகி திலீபனின் 4-ஆம் ஆண்டு நினைவையொட்டி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மக்கள் உறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவினர் ஆதரவுடன் இன்று நடைபெறும் பொதுக்கூட்டங்களின் விபரம் வருமாறு:-

இன்று காலை 10 மணிக்கு இமையாணன் சலாம் அரங்கிலும், மாலை 4 மணிக்கு புலோலி புற்றளை கோவிலடியிலும், மாலை 6-30 மணிக்கு வேலணை தவிடுதின்னிப் பிள்ளையார் ஆலய முன்றலிலும், பி. ப. 7 மணிக்கு அளவெட்டி மாவீரர் கலையரங்கிலும், நுணாவில் கேடில்லி மாவீரர் மைதானத்திலும் நடைபெறும்.

## இலங்கை நிலைமை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் தற்போது தோன்றியுள்ள அரசியலமைப்பு நெருக்கடியை அக்கறையுடனும் அனுதாபத்துடனும் அவதானிக்கும் இந்தியா, கடந்த காலத்தில் நிலவிய உறுதிப்பாடு ஜனாதிபதி பிரேமதாசாவின் பதவிக்காலத்திலும் தொடரவேண்டும் என விரும்புவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

புதுடில்லியில் இந்தியப் பிரதமர் திரு பி. வி. நரசிம்மராவ் வெளியுறவு அமைச்சர் மாதவ் சிங் சோலங்கியுடனும் தான் நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்து இத்தகைய ஒரு உணர்வு இந்தியாவிடம் இருப்பதை புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கிறது எனவும் அமைச்சர் கூறினார்.

# இரு வியாபாரிகள் கொலை; சிப்பாய் கைது

(வவுனியா)

வவுனியாவில் இரு வர்த்தகர்களைக் கொலை செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் ஒரு இராணுவ சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா கூழாங்குளத்தில் இரு வியாபாரிகளின் கொலை தொடர்பாக இராணுவ சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டு, அவர்மீது கொலைக்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

தற்போது இவர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

# வடக்கில் 'பிரபா' தெற்கில் 'பாஸ்கரலிங்கம்'

(கொழும்பு)

கொழும்பில் இனத்துவேசத்தைத் தூண்டும் வகையில் பல சுவரொட்டிகள் தற்போது ஒட்டப்பட்டு வருகிறது.

கடந்த வாரம் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக உள்ள சுவர்களில். 'வடக்கே பிரபாகரன் ஆட்சி-தெற்கே பாஸ்கரலிங்கம் ஆட்சி'' என்று சிங்களத்தில் எழுதப்பட்ட வாசகங்கள் ஒட்டப் பட்டிருந்ததாகவும், அவற்றை பகல்வேளையில் பொலிசார் அகற்றியதாகவும் தெரியவந்துள்ளது. [வி]

## உலக வங்கியின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் அண்மைக் காலங்களில் இடம்பெற்று வரும் சம்பவங்களையடுத்தே உலக வங்கி இக்கூட்டத் தொடரை ஒத்திவைத்துள்ளது.

இதேவேளை இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடும் அடுத்த வருடம் பெப்ரவரி வரை ஒத்திவைக்கப் பட்டதும் தெரிந்ததே. (சி)

## 20-வது நாளாக

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

காட்டு உட்பகுதிக்குள்ளேயே பெரும் போர் நடக்கின்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன,

புலிகளின் முகாம்களை நெருங்க முடியாத நிலையில் படையினர் இருப்பதாகவும் பலர் கண்ணிவெடிகளில் சிக்கியுள்ளதாகவும் நேற்று பல இராணுவத்தினர் உயிரிழந்ததாகவும் மற்றொரு செய்தி தெரிவிக்கின்றது. படையினர் முன்னேறிச் செல்ல முடியாத நிலையில் மிதிவெடி கண்ணிவெடிக்குள் அகப்பட்டு தவிப்பதாகவும் காயப்பட்ட படையினரை எடுக்கமுடியாத தொரு நிலையில் புலிகள் ஆக்ரோச தாக்குதலை நடாத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (56)

## 4 படையினர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இதுவரை 80க்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டும், 200க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துமுள்ளனர். (க)

## புதிய தேர்தல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆணையாளரிடம் எதிர்க்கட்சியினரும் ஐ. தே. க. அதிருப்தியாளர்களும் சமர்ப்பித்துள்ளனர்.

ஜனாதிபதிக்கு எதிரான மனுவை பாராளுமன்றில் கொண்டு வருவதை தடுக்க அவர் பாராளுமன்றை எவ்வேளையும் கலைக்கக்கூடியதொரு சூழ்நிலை தோன்றியுள்ளது.

இந்தக் கட்டத்தில் நீதியாகவும் அரசியலமைப்புக்கு அமையவும் நடக்குமாறும் இவர்கள் தேர்தல் ஆணையாளரைக்கோரியுள்ளனர். (சி-153)

## படைகள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பதியின் அறிவுறுத்தல்களை ஏற்கவேண்டாமென ஜனாதிபதிக்கு எதிரான அணியினர் வேண்டுகோளைப் படையினர் தரப்பிலும் சிலர் ஆதரிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய அரசியல் நிலைமை மேலும் மோசமடையுமானால் படையினர் மத்தியிலும் பிளவு ஏற்படலாம் எனவும் அஞ்சப்படுகிறது. (ஸி)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு செப்ரெம்பர் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Regestered as a News Paper at the General Postoffice Sri Lanka under Licence Number B/10336/81

# வீர வேங்கைகளுக்கு மக்கள் அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

மணலாறு நித்திகைக்குளம் பகுதியில் நடைபெற்றுவரும் யுத்தத்தில் வீரமரணமடைந்த வீரவேங்கைகட்கு நேற்று 3 இடங்களில்பெருமளவு மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

யாழ். குடா எங்கும் வீரமரணமடைந்தபோராளிகளுக்குவடமராட்சி. சுன்னாகம் சந்தை மைதானம், தென்மராட்சிப் பகுதியில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்து சோகமே உருவாக மண்ணின் மைந்தர்களின் புகழுடம்புகளுக்கு தங்களது இறுதி அஞ்சலியினை கண்ணீர் மல்க செலுத்தினர்.

மாலை வீரவேங்கைகளின் புகழுடம்புகள் அவ்வவ் பகுதி மாவீரர்மயானத்தில் தீயுடன் சங்கமமாகியது. (56)

# சர்வோதயம் கப்பலில் உணவுப்பொருள்

(யாழ்ப்பாணம்)

மூன்று மாவட்டங்களின் தேவைகளுக்கென 71 லட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்களை 'சர்வோதயம்' கப்பலில் அனுப்பிவைத்துள்ளது.

இம்முறை வந்துள்ள 'குமாரி' கப்பலில், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ். மாவட்டம் ஆகியவற்றுக்கு 71 லட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் உட்பட மண்ணெண்ணை, சவர்க்காரம். பாடசாலை மாணவர்களுக்கான கொப்பிகள், துணிமணிகள் என்பனவும் இவற்றில் அடங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை மேற்படி கப்பலில் யாழ். அரசாங்க அதிபருக்கு அனுப்பப்பட்ட மண்ணெண்ணையும் சவர்க்காரமும் மிகவிரைவில் பங்கீட்டு முறைப்படி பொதுமக்களுக்கு வழங்கப்பட இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## புலி ஆதரவாளர் 10 பேர் கைது

(சென்னை)

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான சுவரொட்டிகளை ஒட்டியதற்காக 5 பேர் நேற்று முன்தினம் திருச்சியில் கைது செய்யப்பட்டனர். இதே குற்றத்திற்காக வேறு 5 பேரும் பெரியார் மாவட்டத்திலும் கைதாகியுள்ளனர்.

# கொழும்பில்நேற்று இருதரப்புக் கூட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு ஆதரவான 116 எம். பிக்களும் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற ஐ தே. க. வின் பாராளுமன்றகுழுக் கூட்டத்தில் பங்குபற்றினார்கள்.

இதேவேளை எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதிக்கு எதிரான ஐ தே கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் நேற்றுக் காலைஒன்றுகூடி தங்கள் அடுத்த நடவடிக்கைகள் குறித்து ஆலோசித்ததாக கூறப்படுகிறது. (153)

## இளைஞருக்கு மரண தண்டனை

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு 8ம் வட்டாரத்தைச் சேர்ந்த முருகுப்பிள்ளை மதியழகன் (25 வயது) என்பவருக்கு நேற்று மாலை 4-30மணியளவில் புங்குடுதீவில்விடுதலைப் புலிகளால் மரணதண்டனை வழங்கப்பட்டது.

1985-ம் ஆண்டு வைகாசி மாதம் தமது தாயாரை திட்டமிட்டு கொலை செய்தமைக்காகவும், கொழும்பில் லீலாவதி என்ற பெண்ணின் கொலைக்கு உடந்தையாக இருந்தார் என்பதற்காகவுமே இவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (க)

## பொலிஸ் நிலையங்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தினம் இரவு திடீர்த் தாக்குதலை மேற்கொண்டதாகவும் அதன் சேதம் பற்றிய விபரம் தெரியவில்லை என்றும் கூறப்படுகிறது. (வி)

## பாதுகாப்பு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கூறியுள்ளனர்.

ஏற்கனவே தமக்கு கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும், தமது பாதுகாப்பு அகற்றப்பட்டுள்ளதாகவும் லலித் கோஷ்டியினர் சபாநாயகரிடம் கூறியுள்ளனர். [சி-153]

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சகல திரைப்பட அரங்கு. வீடியோ படஅரங்கு உரிமையாளர்களையும் முகாமையாளர்களையும் இன்று 19-ம் திகதி வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு நிதர்சனம் செயலகத்தில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள். [வி]

## நித்திகைக் குளத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நித்திகைக்குளம் காட்டுப் பகுதிகளில் முன்னேற முயன்ற இராணுவத்தினர், நேற்று விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதல்களை எதிர்கொள்ள முடியாமல், தமக்கு ஏற்பட்ட இழப்புக்களுடன் பின்வாங்கியதாகக் கடைசிச் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

# இலங்கைப் பிரச்னை: பிரதமர் நரசிம்மராவ் கருத்து

(புதுடில்லி)

விடுதலைப் புலிகளினதும் இலங்கைத் தமிழ் அகதிகளினதும் பிரச்னை மிகவும் சிக்கலுக்குரியதென இந்தியப் பிரதமர் திரு நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

இப்பிரச்னையை பிரித்தறிய வேண்டுமென்றும் இது மிகுந்த சிக்கலானதென்றும் திரு நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலத்தில் திரு. நரசிம்மராவ் இது பற்றி கருத்து தெரிவித்தது மிகக் குறைவு என்பதும் குறிப்பிடத்தக்கது. [சி]